IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.

OS.No.140/2013
Deposition of witness for PW1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பாலாஜி | Caste | : | |
| Father Name | : | தாமோதரன் | Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 14th day of November, 2025.

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–தொடர்ச்சி

1. அசல் வழக்கு எண்.120/2000, 170/2000 ஆகிய வழக்குகள் குடியாத்தம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நடைபெற்றது. மேற்கண்ட ஆவணங்களை நான் நீதிமன்றததில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். மற்றும் 165/2011 என்ற வழக்கு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. அந்த வழக்கானது எதிர் தரப்பினரால் தாக்கல் செய்யப்பட்டதாகும். மேற்கண்ட மூன்று வழக்கிலும் பிரதிவாதி ஆதியம்மாள் சேர்க்கப்படவில்லை என்றால் மூன்று வழக்கையும் எதிர் தரப்பினர் தான் தாக்கல் செய்தனர். நான் தாக்கல் செய்யவில்லை. நான் தாக்கல் செய்த 140/2013 என்ற வழக்கில் ஆதியம்மாளை நான் தரப்பினராக சேர்த்தேன்.

2. அ.வ.எண்.230/2012 இந்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்று சொன்னால் சரிதான். அது பாகப்பிரிவினை வழக்கு என்றால் சரிதான். அ.வ.எண்.173/2012 என்ற வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.285/2 என்ற எண்ணுக்குறிய சொத்து குறித்து அ.வ.எண்.173/2012 என்ற வழக்கிலும் மேற்கண்ட சர்வே எண் குறித்து சொத்து சம்பந்தப்பட்ட பிரச்சனை உள்ளது என்று சொன்னால் அது பாகம் பிரிக்காத பொது சொத்தில் உள்ள பிரச்சனை ஆகும். மேற்கண்ட அ.வ.எண்.173/2012 என்ற வழக்கில் கிணறு,

கிணறுமேடு, தண்ணீர் செல்லும் கால்வாய் , ஈபி கனெக்சன் ஆகிய பிரச்சனை உள்ளது என்று சொன்னால் சரிதான். அ.வ.எண்.173/2012 என்ற வழக்கில் உள்ள சொத்தானது தாங்கல் வழக்கு சொத்தாக சொல்லியுள்ள அதே கிணறு, கிணறுமேடு, தண்ணீர் செல்லும் கால்வாய் , ஈபி கனெக்சன் உள்ள பகுதியில் 1/3 பாகம் என்று குறிப்பிடப்பட்டுள்ள அதே சொத்துக்களில் இந்த வழக்கின் பிரதிவாதிகளுக்கும் 1/3 பாகம் உள்ளது என்பதின் பேரில் தான் பிரதிவாதிகள் மேற்படி வழக்கை தாக்கல் செய்துள்ளனர் என்று சொன்னால் சரிதான்.

3. நான் உயிலை ஆவணமாக தாக்கல் செயதுள்ள நிலையில் உயிலின் சொத்து விவரங்களைப் பற்றி எனக்கு தெரியுமா என்றால் ராஜூமேஸ்திரியின் அனைத்து சொத்துக்களும் அந்த உயிலில் உள்ளது அதனால் அது பற்றி சரியாக அல்லது முழுவதுமாக தெரியவில்லை ஏற்கனவே 4 செட்டில்கள் எழுதப்பட்டது. ராஜூ மேஸ்திரி முழுவதுமாக வாங்கிய சொத்தின் விஸ்திரனம் எவ்வளவு என்று தெரியுமா என்றால் தெரியாது. 1961 ஆம் ஆண்டு இருந்த மொத்த விஸ்திரனம் 9 ஏக்கர் 63 சென்ட்டில் சர்வே எண்.304/3, 305 ஆகிய சொத்துக்கள் விற்கப்பட்டுவிட்டன விற்பனை செய்யப்பட்ட சொத்துக்கள் 1 ஏக்கருக்கு அதிகமானது விற்கப்பட்டது எனவே அவரிடம் இருந்து சொத்துக்கள் 8 ஏக்கர் 94 சென்ட் தான் என்று சொன்னால் சரிதான். விஸ்வநாதன் ஊதாரிதனமாக சொத்துக்களை விற்பனை செய்துவிட்டார் என்ற காரணத்திற்காக தான் இருக்கும் 8 ஏக்கர் 94 சென்ட் வைத்து செட்டில்மென்ட் எழுதி வைத்தார்.

4. நான் சொல்வது போல் விஸ்வநாதன் விற்பனை செய்யவில்லை என்றாலும் ராஜூ மேஸ்திரி தான் விற்பனை செயதார் என்றாலும் சரிதான். 1967 க்கு பிறகு 8 ஏக்கர் 94 சென்ட் மட்டுமே உள்ள நிலையில் நான்

1961 மூல பத்திரத்தின் அடிப்படையில் செட்டில்மென்ட் எழுதி வைக்கப்பட்டது என்று நான் சொல்வது தவறானது என்றாலும் மோசடியாக செய்யப்பட்டது என்று சொன்னாலும் சரியல்ல. 8 ஏக்கர் 94 சென்டில் தான் 1/3 பாகம் உயில் என்று ராஜூமேஸ்திரி எழுதி வைத்துள்ள நிலையில் உயில் தான் சரியானது என்று சொன்னால் சரியல்ல. உயில் ஆவணத்தை நான் தாக்கல் செய்துள்ளேன். அந்த உயில் ஆவணத்தில் 8 ஏக்கர் 94 சென்ட் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. உயில் செல்லாது என்று விளம்புகை பரிகாரம் போடப்பட்டுள்ள நிலையில் அதற்கான வழக்கு மூலம் குறிப்பிடாத நிலையில் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

5. உயிலில் இரண்டு சாட்சிகள் கையொப்பம் இட்டனர் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. (மேற்கண்ட கேள்விக்கு வாதி தரப்பு வழக்கறிஞர் வாதியானவர் PW1 உயிலில் தரப்பினர் இல்லை என்பதாலும் அவர் 3–ஆம் தரப்பினர் என்பதாலும் மேற்கண்ட கேள்வி கேட்பதற்கு ஆட்சேபணை செய்யப்படுகிறது.) உயில் செல்லும் தன்மை குறித்து கேள்வி எழுப்பியுள்ள நிலையில் மேற்கண்ட ஆவணம் மோசடியாக தயாரிக்கப்பட்டது அல்லது செல்வாக்கை பயன்படுத்தி உருவாக்கப்பட்டது என்று குறிப்பாக காரணங்களை குறிப்பிடாத நிலையில் உயிலின் செல்லும் தன்மை குறித்து கேள்வி எழுப்ப முடியாது என்று சொன்னால் சரியல்ல. அ.வ.எண்.230/2012 மற்றும் 173/2012 ஆகிய இரண்டு வழக்குகளின் வழக்கு மூலங்களும் இந்த வழக்கிற்கு உண்டான வழக்கு மூலங்களும் வெவ்வேறானவை என்பதால் இந்த வழக்கை பற்றி வழக்குரையில் சொன்னதே தவறானது என்று சொன்னால் சரியல்ல.

6. உயிலில் சொல்லப்பட்டுள்ள சொத்துக்களின் விஸ்திரனம் 8 ஏக்கர் 94 சென்ட் ராஜூமேஸ்திரியிடம் 1967–ற்கு பிறகு இந்த 8 ஏக்கர் 94

சென்ட் மட்டும் தான் இருந்துள்ள நிலையில் ஆனால் நான் 1961 ல் விஸ்திரனம் 9 ஏக்கர் 63 சென்ட்டில் இருந்து எனக்கு செட்டில்மென்ட் எழுதியதாக மோசடியான ஒரு பத்திரத்தை வைத்து ஆதியம்மாள் பேரில் எழுதப்பட்ட உயிலானது செல்லத்தக்கதல்ல என்று வழக்கு போட்டிருப்பது சரியானது அல்ல என்று சொன்னால் சரியல்ல. மேலும் இந்த காரணத்தை முன்னிட்டு தான் இவ்வாறு தங்கள் மோசடியான செட்டில்மென்ட் பத்திரத்தை வைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் அ.வ.எண்.230/2012 என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. உயில் எழுதுவதற்கு முன்பாகவே செட்டில்மென்ட் பத்திரம் எழுதப்பட்டது.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)

INBARANI Digitally signed by INBARANI

DISTRICT MUNSIF
KATPADI